வ.மா.பொதுச்சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 20/2022

எனது இல: NP/07/CMA/15
மாகாண பொதுச்சேவை ஆணக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
2022.07.20.

பிரதம செயலாளர்,

ஆளுநரின் செயலாளர்,

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

சகல உத்தியோகத்தர்களுக்கும்,

## மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றம் தொடர்பாக அனைத்து மாகாணங்களும் பொதுவான நடைமுறை ஒன்றின் கீழ் செயற்படுதல்.

வடக்கு மாகாண பொதுச்சேவையில் பல்வேறு பதவிகளிற்கும் நியமனம் பெற்றவர்கள் தம் தேவைகளைக் குறிப்பிட்டு வேறு மாகாணங்களிற்கு இடமாற்றக் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். இக்கோரிக்கைகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தொடர்நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மாகாணங்களிற்கு இடையிலான இடமாற்றம் தொடர்பாக, 2021.09.22 ஆம் திகதி இடம்பெற்ற மாகாண ஆளுநர்களின் கலந்துரையாடலின்போது, அனைத்து மாகாண ஆளுநர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில் கீழ்வரும் மாகாண சபைகள் தமது மாகாணங்களிற்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ளவிரும்பும் அலுவலர்கள் தமது இடமாற்ற விண்ணபத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் தொடர்பான பட்டியலை வெளியிட்டுள்ளன.

1. வட மேல் மாகாணம்
2. தென் மாகாணம்
3. வட மத்திய மாகாணம்
4. மேல் மாகாணம்
5. ஊவா மாகாணம்
6. சப்பிரகமுவ மாகாணம்
7. மத்திய மாகாணம்

மேற்படி மாகாண சபைகளால் வெளியிடப்பட்ட இடமாற்ற விண்ணபத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் தொடர்பான பட்டியல் தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்குறித்த மாகாண சபைகளின் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுக்களால் வெளியிடப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றம் தொடர்பான பொதுவான சுற்றறிக்கைகள், கடிதங்கள் மற்றும் ஆசிரியர்களது மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றம் தொடர்பான நிபந்தனைகளுடனான சுற்றறிக்கைகள் மற்றும் மத்திய அரசின் அமைச்சுக்களால் மத்திய / மாகாண அரசிற்கிடையிலான இடமாற்றம் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் என்பன தங்களின் இலகு நடவடிக்கையின்

பொருட்டு வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் (www.np.gov.lk) தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் குறிப்பிடப்பட்ட மாகாணங்களிற்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும்போது இடமாற்ற விண்ணப்பத்துடன் குறித்த ஆவணங்களையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பிடப்பட்ட ஆவணங்களை முழுமையாக இணைத்து அனுப்பிவைக்காத விண்ணப்பங்கள் தொடர் நடவடிக்கைக்குட்படுத்தப்படாமை தொடர்பில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என்பதனை அறியத்தருகின்றேன்.

**சி. திருவாகரன்,**
**செயலாளர்.**

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

இடமாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் தொடர்பான பட்டியல் தொகுப்பு

| | தேவையான ஆவணங்கள் | மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|
| 01 | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/91 இன் கீழ் இடமாற்ற விண்ணப்பம் | மூலப் பிரதி - 02 |
| 02 | அலுவலரின் நிரந்தர நியமனக் கடிதம் | உறுதிப்படுத்தப்பட்ட பிரதி - 02 |
| 03 | இடமாற்றம் கோரும் மாகாணத்தில் நிரந்தர வதிவாளர் என்பதை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ் (DS 04) | மூலப் பிரதி மற்றும் நிழல்ப் பிரதி |
| 04 | மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்றம் பெற்றபின்னர் இடமாற்றம்பெற்ற மாகாணத்தில் 05 வருடங்கள் கடமையாற்றல் மற்றும் குறித்த மாகாணத்தில் வெற்றிடம் நிலவும் எந்தவொரு சேவை நிலையத்திலும் கடமையாற்ற விருப்பம் தெரிவிக்கும் கடிதம் | மூலப் பிரதி மற்றும் நிழல்ப் பிரதி |
| 05 | பதவியில் உறுதிப்படுத்திய கடிதம். | உறுதிப்படுத்தப்பட்ட பிரதி - 02 |
| | • பதவியில் உறுதிப்படுத்தப்படவில்லையாயின், மாகாண அரச சேவைக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கமைய கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ்களில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் / பல்கலைக்கழக பதிவாளரினால் / உரிய நிறுவன அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்ட கீழ்வரும் ஆவணங்கள்.<br>- க.பொ.ச (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்<br>- பட்டச் சான்றிதழ் / கல்வியியற் கல்லூரி சான்றிதழ் / பயிற்சி சான்றிதழ் / டிப்ளோமா சான்றிதழ் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரதி.<br>- கடமையைப் பொறுப்பேற்ற கடிதத்தின் பிரதி | உறுதிப்படுத்திய பிரதிகள் - 02 |
| 06 | மேல் மாகாண இடமாற்றம் தொடர்பில்:<br>மாகாண அரச சேவையில் நியமனம்பெற்ற அலுவலர்கள் குறித்த பதவியில் உரிய தரத்தில் சேவை மூப்பு பட்டியலில் உரிய இடத்தில் வைப்பதற்கான நிபந்தனைக்கு உட்பட்டு மேல் மாகாண அரச சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் கடிதம்.<br><br>மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கான இடமாற்றம் தொடர்பில்:<br>மாகாண அரச சேவையில் நியமனம் பெற்ற அலுவலர்கள் குறித்த பதவியில் உரிய தரத்தில் சேவைமூப்புப் பட்டியலில் இறுதியில் | மூலப் பிரதி மற்றும் நிழல் பிரதி |

| | | |
|---|---|---|
| | வைப்பதற்கான நிபந்தனைக்கு உட்பட்டு மாகாண அரச சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் கடிதம்.<br>(மத்திய அரசினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மாகாண சபைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் தொடர்பில் சேவை மூப்புப் பட்டியலில் இறுதியில் வைப்பதற்கான நிபந்தனைகள் பொருந்தாது) | |
| 07 | இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் திகதிக்கு முந்தைய மூன்று (03) வருடங்களில் (நடப்பு ஆண்டு உட்பட) சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்டுள்ளது/ பெறப்படவில்லை என்பது தொடர்பாக திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடனான அறிக்கை | மூலப் பிரதி - 02 |
| 08 | அலுவலர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளது / இல்லை என்பது என்பது தொடர்பான திணைக்களத் தலைவரின் அறிக்கை | மூலப் பிரதி - 02 |
| 09 | குறித்த மாகாண சபையில் அலுவலரின் சேவைக்காலத்தின்போது அதனோடு தொடர்புடைய ஏதேனும் காரணத்திற்காக அலுவலருக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது பற்றிய நிறுவனத் தலைவரின் அறிக்கை | மூலப் பிரதி - 02 |
| 10 | அலுவலருக்கெதிராக கடுமையான நிதி முறைகேடுகள் பற்றிய கணக்காய்வுகள் உள்ளது/ இல்லை/ எதிர்காலத்தில் எடுப்பதற்குத் தீர்மானிக்கப்படவில்லை என்பது தொடர்பான திணைக்களத் தலைவரின் அறிக்கை | மூலப் பிரதி - 02 |
| 11 | குறித்த அலுவலர் மாகாண சபையன் செலவில் விசேட பயிற்சி ஒன்றினைப் பெற்றிருப்பின் பயிற்சியுடன் தொடர்புடைய ஒப்பந்தத்தின் கட்டாய சேவைக்காலம் முடிவுற்றிருத்தல் அல்லது ஏதேனும் பத்திரத்திற்கு (bond) உட்பட்டிருப்பின் அதனிலிருந்து விடுபட்டுள்ளார் / இல்லை என்பது தொடர்பான திணைக்களத் தலைவரின் அறிக்கை | மூலப் பிரதி - 02 |
| 12 | இடமாற்ற விண்ணப்பதாரியிடம் இருந்து மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகள் இருப்பின் அது தொடர்பான திணைக்களத் தலைவரின் அறிக்கை. | மூலப் பிரதி - 02 |